தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 5, திருவள்ளுவர் ஆண்டு–2053

2022 மார்ச் 19, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை."

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று *(19–3–2022)* வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ இன்று (19–3–2022) தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2022 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று (19–3–2022) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

2. வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022–2023, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை என்பது தேடுதலாகத் தொடங்கி, நாகரிகமாக மருவி, வாழ்வாக மலர்ந்து, மக்களை வாழ்வித்த நிலை மாறி, நாளடைவில் பிழைப்பாகப் பிசகி, பிறழ்ந்த நிலையை மாற்றி, பணியாக மருவி, தொழிலாக உயர்ந்து, மீண்டும் தமிழ்நாடு எங்கும் பசுமை தழைத்தோங்க, பயிர்கள் செழித்தோங்க, "குடியானவன் வீட்டுக் கோழிமுட்டை அதிகாரி வீட்டு அம்மியாலும் உடையாத" அளவிற்கு அவர்கள் வாழ்வு சமூகத்தில், பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதுதான் வேளாண்மை நிதிநிலை அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

உழவர்தம் உள்ளத்தையும், வறியோர் வயிற்றில் உள்ள பள்ளத்தையும் நிரப்ப வேண்டும் என்பதற்காக, இவ்வாட்சியில் சென்ற ஆண்டு தமிழக வரலாற்றில் முதன்முறையாகத் தாக்கல் செய்யப்பட்டது வேளாண்மை நிதிநிலை அறிக்கை. பொன்னிற நெல் நட்டால் வருகிற வருமானத்தைவிட, நிலத்தில் மஞ்சள் நிறக் கல் நட்டால் வருமானம் அதிகம் வரும் என்கிற மயக்கத்தில்